## இளைஞர்களின் வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது!

# 66 இலட்சம் லிட்டர் பால் கையாளுகின்ற அளவுக்கு ஆவின் கட்டமைப்புகள் உருவாக்கப்படும்!

## சட்டப்பேரவையில் – பால் வளத்துறை மானியக் கோரிக்கையில்

## 18 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் மனோ தங்கராஜ் பதிலுரை!

சென்னை,ஜூன்.25-

**பால்வளத்துறையில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும், 66 இலட்சம் லிட்டர் பால் கையாளுகின்ற அளவுக்கு ஆவின் கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் பால் வளத்துறை மானியக் கோரிக்கையில் 18 அறிவிப்புகளை அறிவித்து அமைச்சர் மனோ தங்கராஜ் பதிலுரையில் குறிப்பிட்டார்.**

**சட்டப் பேரவையில் பால்வளத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மனோ தங்கராஜ் அளித்த பதிலுரை வருமாறு:**

காலங்கள் மாறினாலும் என்றும் அழியாத புகழோடு, கொள்கை குன்றாய் சரித்திரத்தில் நிலைத்து நிற்கும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரை வணங்குகின்றேன். பகுத்தறிவு கருத்துக்களைக் கொள்கைகளாகத் தீட்டி, திராவிட முன்னேற்றக் கழகத்தை துவங்கி, அதிகாரத்தை கைப்பற்றி இன்றைக்கு நம்மையெல்லாம் ஆளுகின்ற மக்களாக மாற்றி, அழகு பார்க்கின்ற நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகின்றேன். நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்கள், நம்மை கண்டெடுத்து, அங்கீகரித்து, ஆளாக்கிய அந்த ஒப்பற்றத் தலைவரை வணங்குகின்றேன். (மேசையத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்த நாடே திரும்பி பார்க்கின்ற ஒரு தலைவராய், தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அவர்களுக்கு ஒரே தலைவராய், ஒப்பற்றத் தலைவராய் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய அன்பிற்குரிய முதல்வர் அவர்களை வணங்குகின்றேன். இந்தச் சபையிலே அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய மூத்த அமைச்சர் அன்பிற்குரிய அண்ணன்; அவை முன்னவர்; நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை வாழ்த்துகின்றேன்.

வருங்கால நம்பிக்கை நட்சத்திரம், தமிழ்நாட்டு அரசியலின் விடிவெள்ளி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய அமைச்சர் அவர்களை வாழ்த்துகிறேன். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களையும் வாழ்த்துகிறேன். இங்கிருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் மற்றும் உறுப்பினர்கள் அத்துணைபேருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அமைச்சர் த. மனோ தங்கராஜ் :** நம்முடைய முதலமைச்சர் அவர்களை இரண்டு காரணங்களுக்காக இந்த தேசமே உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது. தேசத்திற்கு திசை காட்டும் தலைவராக நம்முடைய தலைவர் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற ஓர் அற்புதமான தத்துவத்தை அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள் திராவிட மாடல் ஆட்சியின் மூலமாக. இங்கு பாலின வேறுபாடுகள் கிடையாது; ஜாதி, மத வேறுபாடுகள் கிடையாது; மத வேறுபாடு கிடையாது; ஏற்றத்தாழ்வுகள் கிடையாது; எல்லோரும் சமம் என்கிற தத்துவத்தை முன்னிறுத்தி, அனைத்துதரப்பு மக்களும் பல்வேறு நன்மைகளைப் பெறுகின்ற விதத்திலே ஒரு நல்லாட்சியைத் தருகின்றார் அது ஒன்று. இரண்டாவதாக எடுத்துக்கொண்டால், எந்தச்சூழ்நிலையிலும் ஜனநாயக மரபுகளை தமிழ்நாட்டில் நான் அழிய விட மாட்டேன்; இந்திய துணைக் கண்டத்திலும் அழிய விட மாட்டேன்.

### அதிக அளவில் பால் கொள்முதல்!

சமதர்ம கருத்துக்களை சமத்துவத்தை இந்த இயக்கம் தொடர்ந்து வலியுறுத்தும். மதசார்பற்ற நாடு இந்தியா என்ற பெருமையோடு இந்தியத் துணைக் கண்டம் தொடர்ந்து நீடிக்கும் என்ற ஒரு உத்வேகத்தோடு நம்முடைய தலைவர் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். ஆகையால்தான், அவர் இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திற்கு திசை காட்டுகின்ற ஒரு தலைவராகப் பரிணமித்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தலைவர் வழியிலே நாமெல்லாம் இன்று பணியாற்றிக் கொண்டிருப்பது இந்தச் சமூகத்திற்கு நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய ஒரு தொண்டு என்று நான் கருதுகின்றேன். அய்யன் வள்ளுவன் அவர்கள் அழகாகக் குறிப்பிடுகிறார்.

**“ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.”**

என்று அதனுடைய விளக்கம், நாட்டை ஆளும் ஆட்சியாளர் மக்களை முறையாக ஆட்சி செய்யாவிட்டால், அறனற்ற அவர் ஆட்சியில் நாட்டின் பால்வளம் குறையும். அறிவார்ந்தோர் தாம் கற்றவற்றை மறப்பர் என்று சொல்லியிருக்கிறார். அறனற்ற ஆட்சி நடைபெற்றால் பால்வளம் குறையும். அப்படியென்றால் பால்வளம் என்பது மனிதன் பெற்றிருக்கக்கூடிய அனைத்து வளங்களுக்கும் ஒரு குறியீடாகக் காட்டப்பட்டிருக்கிறது.

பால்வளம் இருந்தால் எல்லா வளமும் இருக்கிறது என்பதற்குச் சமம் என்பது அய்யன் வள்ளுவனின் கருத்து. எனவேதான், இன்றைக்கு பால்வளத் துறையை எடுத்துக்கொண்டால் சிலர் சொன்னார்கள், பாழாகும் பால்வளத் துறை என்று, சிலர் எழுதவும் செய்தார்கள். ஆனால், விவாசயப் பெருங்குடி மக்களின் வாழ்வில் பால் வார்க்கும் துறையாக இன்றைக்கு பால்வளத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் விளைவுதான் இன்றைய தேதியில் 34 இலட்சத்தி 17 ஆயிரத்தி 375 லிட்டர் பால் ஆவின் ஒன்றியங்கள் மட்டும் இன்றைக்கு கொள்முதல் செய்திருக்கிறது.

நான் அங்கு உள்ளூர் விற்பனைக்கு கொள்முதல் செய்ததை கணக்கில் சொல்லவில்லை. இந்த அளவிற்கு ஒரு வரலாற்று நிகழ்வு நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால், மக்கள் இன்றைக்கு செழிப்பாக இந்த ஆட்சியில் இருக்கிறார்கள் என்பதுதான் காரணம். எப்படி இது நிகழ்ந்தது. கடந்த காலங்களில் நம்முடைய அன்புத் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று, மூன்று ரூபாய் விலை உயர்வு கொடுத்தார்கள்.

இன்றைக்கு கடந்த ஆண்டு நான் அமைச்சர் பொறுப்பை ஏற்றபிறகு, நம்முடைய முதல்வர் அவர்களைச் சந்தித்து, கேட்டதன் விளைவாக மீண்டும் ஒரு மூன்று ரூபாய் ஊக்கத் தொகையாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தலைவர் அவர்கள் அறிவித்தார்கள். அது இன்றைக்கு ஒரு மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, விவசாயப் பெருங்குடி மக்களுடைய கோரிக்கை, நாங்கள் பாலைக் கொடுக்கின்ற நேரத்தில் எங்களுக்கு அதனுடைய தரத்தைப் பார்த்து விலையை நிர்ணயிக்க வேண்டும். உடனடி ஒப்புகைக் சீட்டு SPOT ACKNOWLEDGEMENT என்று சொல்வோம். அந்தத் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தி இன்றைக்கு 4,172 பிரதம தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் அதை நாங்கள் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். அது ஒரு மிகப்பெரிய வரவேற்ப்பைப் பெற்றிருக்கின்றது. எஞ்சியிருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களில் உடனடியாக நிறைவேற்றுகின்ற அந்தப் பணி வெகுவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல நீண்ட நாட்களாக அவர்களுக்கு இருந்த கோரிக்கை அவர்கள் வழங்குகின்ற பாலுக்கு விலையை அந்தப் பணப்பட்டுவாடாவை 10 நாட்களுக்குள் செய்யவேண்டும் என்பது தான். அந்தக் கோரிக்கையும் ஏற்கப்பட்டு இன்றைக்கு 10 நாட்களுக்கு ஒருமுறை தவறாமல் அவர்களுக்கு பணப்பட்டுவாடா செய்து கொண்டிருக்கின்றோம். அது ஒரு மிகப்பெரிய முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது. விவசாயப் பெருங்குடி மக்கள் கறவை மாட்டுக் கடன் வாங்குவது ஒரு பெரிய சவாலாக இருந்தது. அதுமட்டுமல்ல, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் 15 சதவிகித வட்டியை அவர்களிடத்திலிருந்து பெற்றுக்கொண்டிருந்தார்கள். இன்றைக்கு அந்த வட்டி 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, கடந்த ஓராண்டு காலத்தில் 137 கோடி கடன் 25,332 மாடுகள் வாங்குவதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, நம்முடைய கூட்டுறவுத் துறையின்மூலமாக கொடுக்கக்கூடிய வட்டியில்லா கால்நடை பராமரிப்புக் கடன் 123 கோடி ரூபாய் 44,125 விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கியிருக்கிறது.

இப்போது எங்களிடத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தந்திருக்கின்றார்கள். அவற்றிற்கும் இந்த ஆண்டு வழங்கி மேலும் பால் உற்பத்தியைப் பெருக்கமுடியும் என்ற ஓர் உத்தரவாதத்தை நான் இந்தச் சபையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று, கால்நடைத் தீவனங்கள் இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டு, அந்தக் கால்நடை தீவனங்கள் தரமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்குவதால் அதிலும் இன்றைக்கு நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. பல்வேறு சங்கங்கள் செயலிழந்த நிலையில், கலைக்கப்படுகிற நிலையில் இருந்த 289 சங்கங்களை இன்றைக்கு அவற்றை மீட்டு ஒரு நல்ல நிலைக்கு நாங்கள் கொண்டுவந்திருக்கின்றோம்.

### பாலின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது!

புதிய சங்கங்கள் 131. அதேபோன்று, இன்னும் அழிவுநிலையில் இருந்த 86 சங்கங்கள் ஆக 217 சங்கங்கள் புத்துயிராக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைத் தாண்டி, பாலின் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காக தரமான பால் வழங்குவோர்களுக்கு ஒரு ரூபாய் கூடுதல் ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்து, அதனடிப்படையில் அந்தத் தொகை வழங்குவதன் விளைவாக, இன்றைக்கு 0.3 சதவிகிதம் என்று சொல்லுவோம். அதாவது கொழுப்புச் சத்தில் 3.9 என்பது நமது மாநில அளவீடாக இருந்தது. அது 4.1 சதவிகிதமாகவும், அதேபோன்று புரதச்சத்து 8.0 என்று இருந்தது, 8.1 அளவிற்கு மாநிலத்தின் பாலின் தரம் இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

பால் உற்பத்தியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு, இந்த நிருவாகத்தில் ஈட்டுகின்ற வருமானத்தில், லாபத்தில் உறுப்பினர்களுக்கு போனஸ் சென்ற ஆண்டு 15.3 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றோம்.

அதேபோன்று ஆதரவு கொள்முதல் விலையாக 24.1 கோடி ரூபாயும், ஈவுத் தொகையாக ரூபாய் 26 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு நிச்சயமாக இந்தத் தொகை பல மடங்காக உயரும் என்று நான் நம்புகின்றேன். ஏனென்றால், இன்றைக்கு தோராயமாக ஒன்றிரண்டு ஒன்றியங்கள் தவிர, மீதியுள்ள அனைத்து ஒன்றியங்களும் இன்றைக்கு லாபகரமான நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் அனைத்து ஒன்றியங்களும் லாபகரமாக செயல்படுகின்ற ஒரு சூழலை உருவாக்கி அதிகமான BONUS மற்றும் DIVIDEND போன்றவற்றை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை நான் இந்தப் பேரவையில் அறிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு நிறுவனம் வளர வேண்டுமென்று சொன்னால், அங்கேயிருக்கக்கூடிய பணியாளர்களும் மிக முக்கியமானவர்கள். ஆவின் நிருவாகத்தைப் பொறுத்தவரையில், அகவிலைப் படியில்கூட பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் இருந்தது அவை எல்லாவற்றையும் ஒரு சீரான அகவிலைப் படி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, இன்றைக்கு 42 சதவிகித அகவிலைப்படி அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அதை 46 சதவிகிதமாக உயர்த்துவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஓய்வூதியதாரர்கள் கூடுதலாக ஊதியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க நம்முடைய முதல்வரவர்கள் 500 ரூபாய் மாதம் ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதலாக அறிவித்து, அதையும் வழங்கியிருக்கின்றோம். அதுவும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்கள் அவர்களுடைய ஊதியம் சரியான முறையில் கிடைக்கவில்லை என்கிற கோரிக்கையை வைத்த நேரத்தில், அவர்களுக்கு அதற்கான உத்தரவைப் பிறப்பித்து அனைத்து ஊழியர்களுக்கும் ESI மற்றும் PF பிடித்தங்கள் தவிர்த்து, எஞ்சிய பணத்தை அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்துகின்ற நடைமுறையை கடைபிடித்து இன்றைக்கு அது அத்துணை தொழிலாளர்கள் மத்தியில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

அதேபோன்று, தொடக்க பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம். இங்கே பேசிய உறுப்பினர் அண்ணன் நீலமேகம் அவர்கள்கூட குறிப்பிட்டார்கள். அவர்கள்தான் இந்த அமைப்பைப் பிடித்து நிறுத்துகின்றவர்கள்.

அவர்கள் கிராமத்தில் பணி செய்கின்ற பணியாளர்கள், அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க வேண்டுமென்று கூறினார். அதற்காக ஓர் உயர்மட்ட குழுவை நியமித்து அவர்களின் பரிந்துரைகளை நாங்கள் பெற்றிருக்கின்றோம். அந்தப் பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. வெகு விரைவில், சம்பள உயர்வு கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு அறிவிக்க இருக்கின்றோம்.

### ரூ. 48 இலட்சம் ரூபாய் சேமிப்பு!

அதேபோன்று, பல்வேறு நிர்வாகச் சீர்திருத்தங்கள் இங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஒன்றை பார்ப்போம் என்று சொன்னால், ஆவின் மிக அதிகமாக மின்சாரத்தை செலவழிக்கக்கூடிய ஓர் அமைப்பு. மாதம் ஒன்றிற்கு சுமார் ரூ.48 இலட்சம் யூனிட் அளவிற்கு மின்சாரம் தேவைப்படும். நான் பொறுப்பேற்றபிறகு, 15.6 சதவிகிதம் அந்தச் செலவினங்களை பல்வேறு நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொண்டு குறைத்திருக்கிறோம். அதன்மூலமாக ஆவின் நிறுவனத்திற்கு மாதம் ஒன்றிற்கு 48 இலட்சம் ரூபாய் சேமிப்பு இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. அதேபோன்றுதான் பால் கொள்முதல் செய்வதற்காக செல்லுகின்ற வாகனங்களின் வழித்தடங்கள் எல்லாம் இன்றைக்கு தேவைக்கேற்றபடி மாற்றியமைத்து, அதன்மூலமாகவும் ஒரு மிகப்பெரிய சேமிப்பு இந்த அமைப்பிற்கு கிடைத்திருக்கிறது.

அதேபோன்று, தொழிற்சாலைகளில் பால் கையாளும்போது ஏற்படுகின்ற இழப்பு. அது 0.2 சதவிகிதமாக அனுமதிக்கப்பட்டிருந்தது. அதை மறுசீராய்வு செய்து 0.5 என்று, அதை நாளில் ஒரு பங்காக குறைத்து, அதை அங்கிருக்கக்கூடிய தொழிலாளர்



தோழர்களுடன் பேசி முடிவு செய்து இன்றைக்கு அது நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக அது நாளில் ஒன்றாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதிலும் ஒரு நல்ல சேமிப்பு என்பது கிடைத்திருக்கிறது.

அதேபோல மனித வள ஆற்றலை மேம்படுத்தி, அதை OPTIMUM USE OF HUMAN RESOURCES என்று அனைத்துத் தரப்பு பணியாளர்களுக்கும் அவர்களுக்கு தேவையான பயிற்சிகள் தொடர்ந்து வழங்கி வருகின்றோம். அந்தப் பயிற்சிகள் தொழிலாளர்கள் மத்தியிலும், அலுவலர்கள் மத்தியிலும் ஒரு மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கின்றது.

ஆவின் நிறுவனத்திற்கு பல பால் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்து வருகின்றோம். ஆக அவற்றிற்கெல்லாம் ஒரு STANDARD OPERATING PROCEDURE அதனுடைய தரம் மாறாமல் இருக்க தர நிரந்தர செயல்முறைகள் ஒவ்வொன்றிற்கும் தயாரிக்கப்பட்டு, இன்றைக்கு அவை மிக ஒரு நல்ல தரத்தில் ஆவின் பொருட்கள் கிடைக்கக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அதன் விளைவாக இன்றைக்கு விற்பனையும் ஒரு கணிசமான அளவிற்கு அதிகரித்து இருக்கிறது.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இரண்டு இலக்குகள் இருக்கிறது. ஒன்று விவசாய பெருங்குடி மக்கள் மத்தியில், இந்த கால்நடை குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி, அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுத்து பால் உற்பத்தியைப் பெருக்குவது. இரண்டாவது மாடுகளின் பால் உற்பத்தி

## 3000 பணியாளர்களுக்கு பாரம்பரிய கால்நடை மூலிகை மருத்துவ பயிற்சி!

திறனை அதிகரிப்பது, இன்றைக்கு இந்த FUTURE SCOPE எதிர்காலத்தின் இந்தத் துறையினுடைய சூழல் எப்படி இருக்கும் என்பதை நான் இந்த உரையின் மூலமாக தமிழ்நாட்டு மக்களுக்கு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவை மிகப்பெரிய அளவில் இருந்துக் கொண்டிருந்தது. அது உள்நாட்டு மொத்த உற்பத்தியில் விவசாயம் சார்ந்த உற்பத்திப் பொருட்களுடைய பங்களிப்பு குறைந்துக்கொண்டிருக்கிறது. அந்த இரண்டையும் நாம் பால்வளத் துறையின் மூலமாக சீர் செய்ய முடியும். ஓர் உதாரணமாக பார்ப்போம் என்று சொன்னால், இன்றைக்கு ஐரோப்பிய நாடுகளில் பால் பொருட்கள் மிக அதிகமாக பயன்படுத்தப்படக்கூடிய நாடுகள். ஆனால் அங்கு அதனுடைய வாய்ப்புகள் OPTIMUM LEVEL, MAXIMUM LEVELஐ எட்டிவிட்டது. ஏனென்றால் நம்முடைய நாட்டை எடுத்துக்கொண்டால் ஒரு மாட்டினுடைய சராசரி பால் உற்பாத்தி என்பது ஐந்து, ஆறு லிட்டர்தான் பால் கறக்கும்.

ஆனால், மேலைநாடுகளை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு 30 முதல் 32 லிட்டர் பால் கறக்கக்கூடிய அளவிற்கு அவர்கள் உற்பத்தித்திறனை மேம்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு இனவிருத்தி, சத்தான உணவுகள், முறையான மருத்துவ சேவைகள் போன்றவற்றை அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இனி அங்கு பால் உற்பத்தியை பெருக்குவதற்கான வாய்ப்புகள் மிக அரிது. ஆனால் உலக சந்தையில் ஏற்படுகின்ற, இந்த பாலினுடைய தேவைகள் பெருகி வருகின்ற காலகட்டத்தில் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில், இந்த பாலை உற்பத்தி செய்வதற்கு, பால் வளத்தை பெருக்குவதற்கு நிறைய வழிவகைகள் இருக்கிறது. எனவே, மாடுகளுடைய பால் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான பால்வேறு முயற்சிகளை நாங்கள் எடுத்து வருகின்றோம்.

இங்கு பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள்கூட குறிப்பிட்டார்கள். இன அபிவிருத்தி செய்யவேண்டும். நம்முடைய இனங்களை பாதுகாக்கவேண்டும். இன அபிவிருத்திக்கான பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். JERSEY இனத்தில் இருக்கக்கூடிய அந்த பொலிக் காளைகள் வளர்த்து, இன்றைக்கு 250க்கு மேற்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட மிகச் சிறந்த உயரிய தன்மைகளைக் கொண்ட, காளைகள், வெளி மாநிலங்களுக்கு, வட மாநிலங்களுக்குகூட 250 மேற்பட்ட காளைகளை சென்ற ஆண்டு கொடுத்திருக்கின்றோம். அதுவும் ஒரு சாதனையான பார்க்க முடிகிறது.

### இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

எனவே, அதுபோன்று இன்றைக்கு இப்படிப்பட்ட தொழில்கள் எதிர்காலத்தில் ஒரு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இதில் யாருக்கெல்லாம் விருப்பமிருக்கிறதோ, இன்றைக்கு தமிழ்நாட்டில் இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கக்கூடிய இளைஞர்கள், விளிம்பு நிலை மக்கள், கண்டிப்பாக அவர்கள் எந்த நேரத்திலும் பால்வளத் துறை அலுவலர்களை அணுகலாம். அவர்களுக்கு பல்வேறு திட்டங்களின்மூலம் மானியம், கடன் உதவி, போன்றவற்றை செய்துகொடுத்து உரிய ஆலோசனைகளை வழங்கி, அவர்கள் ஒரு MINI DAIRY சிறிய பண்ணை போன்று ஏற்படுத்துவதற்கு, எந்த விதத்திலும் உதவுவதற்கு நம்முடைய அலுவலர்கள் எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறார்கள்.

அதேபோன்று உபபொருட்கள் விற்பனைக்கும் நிறைய வாய்ப்புகள் இருக்கிறது. இங்கு வேலையில்லாமல் இருக்கக்கூடிய பெண்கள் அல்லது விளிம்புநிலை மக்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நாங்கள் உதவுவதற்கு தயாராக இந்தத் துறை இருந்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஒவ்வொரு துறையிலும் தொழில்நுட்பம் மிகப்பெரிய அளவில் வளர்ந்துக்கொண்டிருக்கிறது.

இன்றைக்கு DAIRY INDUSTRY, பால் வளத்தைப் பொறுத்தவரையில் தனியாரை பார்த்தீர்களென்றால் அவர்கள் மொத்தமாக அதை CORPORATIZE செய்து அதை DAIRY AUTOMATION, DIGITALISATION போன்றவற்றைக் கொண்டு வந்து, எல்லாம் மொத்தமாக அவர்கள் A UTOMATE செய்திருக்கிறார்கள். அதேபோன்று நாமும் கொண்டுவரவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் DAIRY AUTOMATION அதேபோன்று LOGISTICS, DIGITAL TRANSFORMATION, FINANCIAL MANAGEMENT போன்றவற்றுக்கெல்லாம் நாங்கள் வல்லுநர்களை நியமிக்க இருக்கிறோம். அதற்கான அறிவிப்புக்கூடக் கொடுத்திருக்கின்றோம். அதன்மூலமாக நிச்சயமாக அடுத்த நிலைக்கு நிறுவனத்தை கொண்டுசெல்ல முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று நிர்வாக சீர்திருத்தங்கள் வேண்டுமென்று எங்களுடைய பணியாளர்கள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சட்டத்தில் ஒரு சில மாற்றங்கள், அதேபோன்று ஏற்கெனவே இருக்கக்கூடிய விதிகள், அரசாணைகள், சுற்றறிக்கைகள் போன்றவற்றில்கூட பல்வேறு மாற்றங்களை இன்றைக்கு ஒரு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி வருகின்றோம்.

விவசாய பெருங்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையில் ஒன்றான, ISI FORMULAல் பாலிற்கான விலை கொடுக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையும் பரிசீலிக்கப்பட்டு, அதையும் உடனடியாக வழங்குவோம். காரணம், இதுவரையில் நாங்கள் வழங்கி வருவது MODIFIED RICHMOND FORMULA என்பது, அதை இவர்கள் ISO ஆக மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை நாங்கள் நிறைவேற்றிக் கொடுக்க இருக்கின்றோம். அதன் மூலமாக இன்னும் 50 முதல் 75 காசுகள் பால் விலை உயர்ந்து, கூடுதலாக அவர்களுக்கு கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றது.

அதேபோன்று செயற்கை முறை கருவூட்டல் இன்றைக்கு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. ஊட்டியில் அதற்கான ஒரு பண்ணை இருக்கிறது. அங்கு 159 பொலி காளைகள் இருக்கின்றன. 2021 ஆம் ஆண்டு வரையில் நான்கு இலட்சம் குச்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆனால், சென்ற ஆண்டு அது 16,57,000 ஆக உயர்ந்திருக்கிறது. இந்த ஆண்டு நாங்கள் இருபது இலட்சம் என்ற இலக்கு வைத்து, அனைத்துப் பகுதிகளுக்கும் தட்டுபாடின்றி செயற்கை முறை கருவூட்டல் உரைஉந்து குச்சி வழங்குவதற்கான பணிகளை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். பால்வளத் துறையில் இன்றைக்கு ஒரு புதிய TREND வருகிறது. என்னவென்றால், மேய்ச்சல் நிலங்கள் எல்லாம் குறைந்து கொண்டிருக்கிறது. மேய்ச்சல் நிலங்களுக்கான வாய்ப்புகளும் குறைவாக இருக்கிறது. எனவே, இந்த நேரத்தில் பசுந்தீவன ஊறுகாய் புல் SILAGE என்று சொல்வார்கள், அதைத் தயாரித்து அது பசுந்தீவனத்திற்குப் பதிலாக வழங்குகின்ற நடைமுறை உள்ளது. அதுதான் இனி FUTURE SCOPE ஆக இருக்கும். அதற்கான பணிகளையும் நாம் செய்து கொண்டிருக்கிறோம். அதற்கான ஒரு திட்டத்தை நாம் ஈரோட்டின் சத்தியமங்கலம் பகுதியில் உடனடியாக ஆரம்பிக்க இருக்கின்றோம். இந்தத் துறையை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச்செல்வதற்கு இதுவும் ஒரு வாய்ப்பாக இருக்கும். இன்றைக்கு சிலர் கேள்விக் கேட்கிறார்கள், பாலை அதிகமாகக் கொள்முதல் செய்தால், அதை எப்படி DISPOSE செய்வீர்கள், எவ்வாறு கையாள்வீர்கள் என்று கேட்கிறார்கள். ஏற்கெனவே நமக்கு இருக்கும் EXISTING CAPACITY 48 இலட்சம் லிட்டர்.

அவ்வளவு பாலை கையாளக்கூடிய சக்தி நமக்கு இருக்கிறது. அதற்கான கட்டமைப்பும் நம்மிடம் இருக்கிறது. ஆனால் இப்போது 18,50,000 லிட்டர் பாலை அதிகமாக கையாள்வதற்கானப் பணிகளை நாம் துவங்கி இருக்கிறோம். அந்தப் பணிகள் முடிகின்ற நேரத்தில் சுமார் 66,00,000 லிட்டர் பாலை கையாளுகின்ற அளவுக்கு வெகுவிரைவில் இந்த ஆவினுடைய கட்டமைப்புகள் பெருகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்றைக்கு கால்நடை தீவனங்கள் பெரும் சவாலாக இருக்கின்றன. கால்நடை தீவனங்களை நாம் தரமாகக் கொடுத்திருக்கிறோம், அதன் தரத்தை உயர்த்தி இருக்கின்றோம்.

இதுவரையில் நாம் 300 மெட்ரிக் டன் தயாரித்துக் கொண்டிருந்தோம். தற்போது உடனடியாக விருதுநகரில் 50 மெட்ரிக் டன் துவங்குவதற்கு READY ஆக இருக்கிறது. அதேபோன்று புதுக்குடி மற்றும் திட்டக்குடியில் 300 மெட்ரிக் டன் CAPACITY கொண்ட இரண்டு ஆலைகள் துவங்குவதற்கான பணிகள் துவங்கி நடந்து கொண்டிருக்கின்றன. அம்மாபாளையத்தில் நீண்ட காலமாக பூட்டியிருந்த POWDER PLANT இன்றைக்கு இயக்கப்பட்டு, 20 மெட்ரிக் டன் POWDERஐ தயாரித்துக் கொண்டிருக்கிறோம். அதேபோன்று பாடலூரில் 60 மெட்ரிக் டன், சேலத்தில் 30 மெட்ரிக் டன் தயாரிப்பதற்கான பணிகளும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பல்வேறு பணிகள் இந்தப் பால்வளத் துறையின் மூலமாக நடைபெற்று வருகிறது. பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற சங்கங்களாக நம்முடைய பிரதம கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்க வேண்டும் என்பது எங்களுடைய நோக்கம். சுமார் பத்தாயிரம் துவக்க பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தாலும், அதனுடைய ECONOMICAL VIABILITY பொருளாதார தன்மை என்பது மிகவும் கடினமான சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலையை மாற்ற வேண்டும்.

அதற்கு நாங்கள் பல்வேறு திட்டங்களை முன் வைத்திருக்கின்றோம். அதில் ஒன்று, அந்த சங்கங்களையெல்லாம் ஆவின் நிறுவனத்தினுடைய WHOLESALE DEALER ஆக விரும்புகின்றவர்களுக்கு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் நாங்கள் கொடுத்தோம். 150 சங்கங்கள் அதை எடுத்துக் கொண்டார்கள். அந்த 150 சங்கங்கள் மூலமாக ஒரு கோடியே பதினெட்டு இலட்சம் ரூபாய்க்கு பொருட்களை அவர்கள் வியாபாரம் செய்திருக்கின்றார்கள். அதில் அவர்களுக்கு இலாபம் கிடைக்கும். அதேபோன்று, இதர கூட்டுறவுச் சங்கங்களிலும் முப்பது இலட்சம் ரூபாயை சென்ற மாதம் SALES செய்திருக்கிறார்கள்.

இதுவரையிலும் இந்த CATTLE FEED நம்முடைய மாட்டுத் தீவனம் விற்கக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு எந்த COMMISSION கிடையாது. தற்போது அவர்களுக்கு நாங்கள் ஒரு சிறிய COMMISSION தருகின்றோம் என்று சொல்லியிருக்கின்றோம்.

அதேபோல, கடன் பெற்றுக் கொடுக்கக்கூடிய வங்கிகளில் சேவைக் கட்டணமாக கண்டிப்பாக அவர்கள் இந்தச் சங்கங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று பேசியிருக்கின்றோம். இதையெல்லாம் செய்து வருகின்ற நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் நிச்சயமாக இலாப நோக்கில் பொருளாதாரத்தில் நிலைத்தத் தன்மையை உருவாக்கும். எனவே, அதற்கான முன்னெடுப்புகளையும் நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். எனவே, இந்த நேரத்தில் நான் இந்தத் துறையின் சார்பில் சில அறிவிப்புகளை வாசிக்க இருக்கின்றேன். தலைப்பை மட்டும் வாசிக்கின்றேன்.

### அறிவிப்புகள்

1.2024-2025 ஆம் ஆண்டில் புதிதாக பதிவு செய்யப்படும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு SS பால்கேன்கள், பால் அளவை உபகரணங்கள், பதிவேடுகள் மற்றும் பால் பரிசோதனை கருவிகள் ஆகியவை வழங்கப்படும்.

2.பசுந்தீவன பற்றாக்குறையை கருத்தில் கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.100 இலட்சம் செலவில் பசுந்தீவன புல் கரணைகள் வழங்கப்படும்.

3.பேரறிஞர் அண்ணா கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நலநிதித் திட்டத்தின்கீழ் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு மற்றும் இதர நிதியுதவிகள் உயர்த்தி வழங்கப்படும்.

4.பால் உற்பத்தியாளர்களின் கால்நடைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து டானிக் (NUTRACEUTICALS) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்மூலம் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படும்.

5.களப் பணியாளர்களான கால்நடை மருத்துவர்கள், விரிவாக்க அலுவலர்கள், கிராம நல ஊழியர்கள் போன்ற 3,000 பணியாளர்களுக்கு பாரம்பரிய கால்நடை மூலிகை மருத்துவ பயிற்சிகள் வழங்கப்படும்.

6.தரமான பால் கொள்முதல் மற்றும் பால் உற்பத்தியை உறுதி செய்யும் நோக்கில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள கடலூர், திருவண்ணாமலை, தர்மபுரி மற்றும் கரூர் ஒன்றியங்களில் ரூ.234 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வுக்கூடங்கள் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) மூலம் நிறுவப்படும்.

7.23 ஒன்றிய மற்றும் அனைத்து இணைய பால் பண்ணைகளின் ஆய்வுக்கூடங்கள் ரூ.931.50 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) மூலம் மேம்படுத்தப்படும்.

8.கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், ஒன்றிய மற்றும் இணைய ஊழியர்களுக்கு ரூ.95 இலட்சம் செலவில் திறன் மேம்பாட்டு பயிற்சி தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) மூலம் வழங்கப்படும்.

9.முதற்கட்டமாக புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திருச்சி, வேலூர், திருப்பத்தூர், தஞ்சாவூர், திண்டுக்கல், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய ஒன்றியங்கள் மற்றும் சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல் (ERP & AMCS) பணிகள் ரூ.14.20 கோடி மதிப்பீட்டில் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (NPDD) மூலம் செயல்படுத்தப்படும்.

10. 150 தொகுப்பு பால் குளிரூட்டும் மையங்களில் முதற்கட்டமாக ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் பால் பகுப்பாய்வு (கலப்படம்) கருவிகள் தேசிய பால்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (NPDD) நிறுவப்படும்.

11.பால் கொள்முதல், பாலின் தரம் மற்றும் பால் விநியோகம் ஆகியவற்றிற்கு உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்குவதற்கு ஏதுவாக 500 தொகுப்பு பால் குளிரூட்டும் மையங்களில் மென்பொருள் நிறுவப்பட்டு பால் கொள்முதல் செயல்பாடுகள் CLOUD BASED CONNECTIVITY மூலம் கண்காணிக்கப்படும்.

12.பால் உற்பத்தியாளர்கள் குறித்த விவரங்கள், அவர்களின் கறவை மாடுகள் குறித்த விவரங்கள், பால் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தியாளர்கள் பயிரிடும் பசுந்தீவனத்தின் அளவு ஆகிய தரவுகள் ஆன்ட்ராய்டு செயலிமூலம் சேகரிக்கப்படும்.

13. சிவகங்கை ஒன்றியத்தின் தற்போதுள்ள பால் பாக்கெட் குளிர்பதன அறையின் கையாளும் திறன் 20,000 லிட்டரிலிருந்து 1,00,000 லிட்டராக ஒன்றியத்தின் சொந்த நிதியை பயன்படுத்தி உயர்த்தப்படும்.

14. சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கறவை மாடுகளின் பால் உற்பத்தி திறனை அதிகரிக்க சிறப்பு கால்நடை பராமரிப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.

15. நாமக்கல் ஒன்றியத்தில் பால் கொள்முதல், பால் பதப்படுத்துதல் மற்றும் பால் சந்தைப்படுத்துதல் ஆகியவற்றின் உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய பால் வள வாரியத்தின் (NDDB) “ஒன்றிய புத்தாக்க திட்டத்தின்” கீழ் மேம்படுத்தப்படும்.

16. மாவட்ட ஒன்றிய மற்றும் சென்னை மாநகர பால் பண்ணைகளுக்கு ISO 22000 சான்றிதழ் பெறப்படும்.

17. மாவட்ட ஒன்றியங்களுக்கு சொந்தமான காலி நிலத்தில் இயந்திரமயமாக்கபட்ட நவீன விவசாய முறைகளை பயன்படுத்தி மாதிரி கால்நடை பண்ணை நிறுவுதல்.

18. புதிதாக பால் பண்ணை தொழில் துவங்க விரும்பும் தொழில்முனைவோருக்காக இரண்டு பால் பண்ணை தொழில் வளர்ச்சி மையம் அமைத்தல்.

உறுப்பினர்கள் பலர் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். என்னுடைய உரையில் பதில் கிடைத்திருக்கும் என்று நம்புகின்றேன். அதில் அவர்களுக்கு திருப்தியில்லையென்றால், நிச்சயமாக அவர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம். அவர்களுக்கு வேண்டிய அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த தயாராக இருக்கின்றோம். எனவே, அந்த வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு. . .

மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் மனோ தங்கராஜ் பதிலுரை வழங்கினார்.